நகராட்சி அலுவலகம்
தேனி அல்லிநகரம்
நாள்:

**மன்றப் பொருள்**

தேனி அல்லிநகரம் நகராட்சியின் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான நிர்வாக அறிக்கை (Administrative Report) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,
2. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: / 2025/சி1

30/9/25
ஆணையாளர்
தேனி அல்லிநகரம் நகராட்சி

30.9/2025

B. Renu 30/9/2025
நகர்மன்றத் தலைவர்
தேனி அல்லிநகரம் நகராட்சி

Scanned with OKEN Scanner

## PI -2.3 Annual report by Executive Authority ( [illegible] )

Annual report by executive authority for the financial year 2024-25 have been duly uploaded on the respective website inJune 2025, in adherence to the timelines prescribed in the Project Operations Manual (POM).

Please find the link to the uploaded report below https://www.tnurbantree.tn.gov.in/theni/administrative-reports/

**Commented [YD6]:** As instructed by DMA, ULBs haven't uploaded any document on website yet. But to comply with the timelines ULBs will need a self certification with commissioners signature and link to the page where the document is uploaded to verify this PI

### தேனி அல்லிநகரம் நகராட்சி

### 24–25 ஆம் ஆண்டு –நிர்வாக அறிக்கை

### அமைப்பும் நிர்வாகமும்

**1) அமைப்பு**

தேனி அல்லிநகரம் நகராட்சி மன்றம் 01-4-1964 ஆம் நாள் முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு ,பின்னர் 10.2.1972–ன் அரசாணை எண்.194ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும் 09.5.1983 ல் அரசாணை எண்.851–ன் படி முதல்நிலை நகராட்சியாகவும் அரசாணை எண் 237நாள். 02.12.08–ல் தேர்வு நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு , அரசாணை நிலை எண்.57 நாள்.05.23 முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

அரசின் 10.06.1969ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஆணை எண்.1017ன் படி தேனி அல்லிநகரம் நகராட்சி எனப் பெயரிடப்பட்டது.

தேனி பொம்மையகவுண்டன்பட்டி மற்றும் கருவேல்நாயக்கன்பட்டி ஆகிய மூன்று கிராமங்கள் உள்ளடங்கிய தேனி–அல்லிநகரம் நகராட்சியாக விளங்குகிறது. அல்லிநகரம் வருவாய் கிராமம் முழுவதும் நகராட்சி எல்லைக்குட்பட்டதாகும். தேனி–அல்லிநகரம் நகராட்சி தேனி மாவட்டத்தின் தலைநகரமாகவும் உள்ளது.

இந்நகரின் மொத்த பரப்பளவு 22.23 சதுர கி.மீட்டராகும்.

11–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்நகரின் மக்கள் தொகை 94423 ஆகும்.

ஆண்கள் – 47266

பெண்கள்– 47146

மற்றவர்– 11

**2) நிர்வாகம்:**

அ) மன்றம்:-

இந்நகர் பகுதி 33 வார்டுகளைக்கொண்டுள்ளது. இந்நகர் மன்றத்தில் சமுதாய சுழற்சி அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை கீழ்கண்ட விபரப்படி 33 ஆகும்.

| | |
|---|---|
| பொது | 14 |
| ஆதி–திராவிடர்(பொது) | 2 |
| ஆதி–திராவிடர்(பெண்கள்) | 3 |
| பொது (பெண்கள்) | 14 |
| மொத்தம் | 33 |

ஆ) ஆணையாளர்:-

அறிக்கையாண்டில் திரு.அஜஹாங்கீர் பாஷா , 01.04.24 முதல் 06.08.24 முடிய நகராட்சி ஆணையாளர் பின்பு திரு.பி.ரகுராஜ் 08.08.24 முதல் ஆணையாளராக தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அறிக்கையாண்டில் மேலாளர் பணியிடம் காலியிடமாகவும், திரு.பொ.அய்யப்பசாமி , கணக்கர்(பொ) மேலாளர் (பொறுப்பு) 30.12.24 வரை பணிபுரிந்து வருகிறார்.

| பொதுப்பிரிவு | பணியாளர்கள் | வருவாய் பிரிவு | பணியாளர்கள் |
|---|---|---|---|
| நிர்வாக அலுவலர் நிலை –1 | 0 | வருவாய் அலுவலர் | 1 |
| கணக்கு அலுவலர் நிலை –1 | 0 | வருவாய் ஆய்வர் | 2 |
| உதவி திட்ட அமைப்பாளர் | 1 | வருவாய் உதவியாளர் | 8 |
| உதவியாளர் | 5 | பதிவறை எழுத்தர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 10 | | |
| தட்டச்சர் | 1 | | |
| அலுவலக உதவியாளர் | 4 | | |

3) தேர்தல்:-

தேனி அல்லிநகரம் நகர் மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை மக்கள் தொகை அடிப்படையின்பேரில் 24 ல் இருந்து 33 வார்டுகளாக உயர்த்தி அரசு தனது 11.06.1996 ம் தேனி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 135ம் எண்ணிட்ட அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி 33 வார்டுகளிலும் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டு 19.02.22-ம் தேதியன்று உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது .

| | | |
|---|---|---|
| பொது | 14 | 1, 4, 6, 12, 14, 16, 19, , 26, 27, 30, 31, 32, 33 |
| ஆதி திராவிடர் (பொது) | 2 | 8, 9 |
| ஆதி திராவிடர் (பெண்கள்) | 3 | 3, 7, 11 |
| பொது (பெண்கள்) | 14 | 2, 5, 10, 13, 15, 17, 18, 21, 22, 23, 24, 25, 28, 29 |

அரசு அறிவிக்கையின்படி 04.03.22-ம் தேதியிலிருந்து திருமதி.பா.ரேணுப்பிரியா தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தலைவராகவும், திரு.மா.செல்வம், நகர்மன்றத்துணைத்தலைவராகவும் இருந்து வருகிறார்கள். மேலும் 02.03.22ம் தேதி முதல் கீழ்க்கண்ட வார்டு நகர்மன்ற உறுப்பினர்களாக பதவி வகித்து வருகிறார்கள்

| வார்டு எண் | உறுப்பினர்களின் பெயர் | பதவி விபரம் |
|---|---|---|
| 10 | திருமதி.பா.ரேணுப்பிரியா | நகர்மன்றத்தலைவர் |
| 32 | திரு.மா.செல்வம் | நகர்மன்ற துணைத்தலைவர் |
| 1. | திரு.ஜே.விஜயன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 2. | திருமதி.அ.சப்புலட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 3. | திருமதி.ம.காமாட்சியம்மாள் | நகர்மன்ற உறுப்பினர் |
| 4. | திரு.செள.சதீஷ்குமார் | நகர்மன்ற உறுப்பினர் |
| 5. | திருமதிஎஸ்.கிருஷ்ணபிரபா | நகர்மன்ற உறுப்பினர் |
| 6. | திருமதிநா.அனுசுயா | நகர்மன்ற உறுப்பினர் |
| 7. | திருமதி.பா.செல்வி | நகர்மன்ற உறுப்பினர் |
| 8. | திருமதி.கா.பாப்பா | நகர்மன்ற உறுப்பினர் |
| 9. | திரு.ப.மணிகண்டன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 11. | திருமதி.சே.பழனியம்மாள் | நகர்மன்ற உறுப்பினர் |
| 12. | திரு.சி.தினேஷ்குமார் | நகர்மன்ற உறுப்பினர் |
| 13. | திருமதி.வி.ஆனந்தி | நகர்மன்ற உறுப்பினர் |
| 14. | திரு.ஆ.நாகராஜ் | நகர்மன்ற உறுப்பினர் |
| 15. | திருமதி.த.கிருஷ்ணவேனி | நகர்மன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 16. | திரு.பெ.ராஜ்குமார் | நகர்மன்ற உறுப்பினர் |
| 17. | திருமதி.க.ஜெயா | நகர்மன்ற உறுப்பினர் |
| 18. | திருமதி.ச.சரஸ்வதி | நகர்மன்ற உறுப்பினர் |
| 19. | திரு.நா.ச.நாராயணபாண்டியன் | நகர்மன்ற உறுப்பினர் |
| . | திரு.து.பாலமுருகன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 21. | திருமதி.க.கிருஷ்ணகுமாரி | நகர்மன்ற உறுப்பினர் |
| 22. | திருமதி.சௌ.சற்குணம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 23. | திருமதி.ரா.இந்திராகாந்தி | நகர்மன்ற உறுப்பினர் |
| 24. | திருமதி.ஜெ.சங்கீதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 25. | திருமதி.மோ.நாகராணி | நகர்மன்ற உறுப்பினர் |
| 26. | திரு.எஸ்.டி.பிரிட்டிஷ் (இறப்பு) | காலியிடம் |
| 27. | திரு.பி.துய்யனார்பிரபு | நகர்மன்ற உறுப்பினர் |
| 28. | திருமதி.க.கோகிலா | நகர்மன்ற உறுப்பினர் |
| 29. | திருமதி.பி.சந்திரகலாஈஸ்வரி | நகர்மன்ற உறுப்பினர் |
| 30. | திரு.க.சந்திரமோகன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 31. | திருமதி.மலதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 33. | திரு.க.கடவுள் | நகர்மன்ற உறுப்பினர் |

**4) மன்றக் கூட்டங்கள் :**

ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் பதவி வகித்த காலங்களில் மன்றக் கூட்டம் மாதந்தோறும் ஒன்றுக்கு மேற்பட்டு நடைபெற்றன. அறிக்கையாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தால் சாதாரணக் கூட்டம் 1 நடைபெற்றுள்ளது. அவசரக் கூட்டங்கள் 1ம் நடைபெற்றன.

அறிக்கையாண்டில் சாதாரண கூட்டத்தில் 49 பொருள்களும் அவசரக்கூட்டத்தில் 12 பொருட்களும் முடிவிற்கு வைக்கப்பட்டு அனைத்து பொருள்களும் முடிவு செய்யப்பட்டன.

மன்றக்கூட்டம் நடைபெற கவனிக்க வேண்டிய விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டது.

**5) குழுக்கள்:**

(1) நியமனக்குழு (2) ஒப்பந்தக்குழு (3) உள்ளூர்த்திட்டக்குழுமம் (4) வரிமேல் முறையீட்டுக்குழு ஆகியவை சட்டப்பூர்வமான குழுக்கள் ஆகும். அனைத்து குழுக்களுக்கும் நகர்மன்ற தலைவர் அவர்கள் குழுத்தலைவராக உள்ளார்.

**6) நிர்வாக சேவை:**

அறிக்கையாண்டில் ரூ.4544.26 லட்சம் செலவு செய்யப்பட்டது.

**7) பொறியியல் பிரிவு:**

அறிக்கையாண்டில் திரு.வேபாலமுருகன் அவர்கள் 01.04.24 முதல் 31.05.24 வரை நகராட்சிப் பொறியாளராவும் திரு.அய்யனார்,கம்பம் நகராட்சி பொறியாளர் அவர்கள் 31.05.24 முதல் 31.03.25 வரையிலும் நகராட்சி பொறியாளர்(பொ)– ஆகவும் ,திரு.ரா.முருகன்,அவர்கள் உதவிப் பொறியாளராக அறிக்கை ஆண்டில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

**சாலைகள்/ பாலங்கள்/ கட்டிடங்கள்:**

இந்நகராட்சி எல்லைக்குள் (1) பெரியகுளம் – குமுளி என்ற நேருஜி நெடுஞ்சாலை , (2) தேனி – மதுரை என்ற காந்திஜி சாலை ஆகிய இரு பெருஞ்சாலைகளும் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நகராட்சி எல்லைக்குள் மேற் கூறப்பட்ட இரு நெடுஞ்சாலைகளின் நீளம் 9 கி.மீட்டர் ஆகும். 02.09.1976ம் தேதிய ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண்.1793ன்படி , மேற்கூறப்பட்ட சாலைகளின் சந்திப்பில் அமரர் நேருஜி அவர்களின் திருவுருவச்சிலை தேனி, வர்த்தக சங்கத்தினால், நிறுவப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டுவருகிறது.

இந்நகர் மன்றம் கீழே தரப்பட்ட விபரப்படி சாலைகளைப் பராமரித்துவருகிறது.

| வ.எண் | சாலை | |
|---|---|---|
| 1. | தார்சாலை | 56.972 கி.மீ |
| 2. | சிமெண்ட் சாலை | 4.258 கி.மீ |
| 3. | பேவர் பிளாக் | 49.327 கி.மீ |
| 4. | மண்சாலை | 6.017 கி.மீ |
| மொத்தம் | | 116 . 574 கி.மீ |

சாலை பராமரிப்பு தொகைக்கென திட்டப்பணிகளின் மூலம் அறிக்கையாண்டில் 176 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுகளைப்போல அறிக்கையாண்டில் நகராட்சி எல்லைக்குள் 9 கி.மீ நீளமுள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. சாலைகளின் போக்குவரத்து காவல் துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

24–25 ஆண்டு நகராட்சியின் திட்டம் வாரியான சாதனை அறிக்கை

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ( ரூ. இலட்சத்தில் ( |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் | மேற்கு சந்தை பகுதியில் புதியதாக கடைகள் கட்டும் பணி | 817.00 |
| 2 | O & M Deficit Grant Fund ( DGF ) 24 – 25 | இராஜவாய்க்காலினை சீரமைப்புகள் மேற்கொள்ளுவதற்கு சிறுபாலங்கள் கட்டும் பணி | 226.00 |
| 3 | | தேனி பெரியகுளம் புறவழிச்சாலையில் குடிநீர் பிரதான குழாய் அமைக்கும் பணி | 130.00 |
| 4 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் | தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை மேம்படுத்தும் பணி | 158.50 |

<u>குடிநீர் திட்டம்</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சி மாவட்ட தலைநகராக உள்ளது. நகரின் மொத்த பரப்பளவு 22.23 சதுர கி.மீட்டராகும். நகரின் 11–ன்படி மக்கள் தொகை 94,453 ஆகும். நகரில் தற்போது 81.00 கி.மீட்டர் நீளத்திற்கு பகிர்மான குழாய்கள் AC மற்றும் PVC மூலம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பகிர்மான குழாய்கள் அனைத்தும் சுமார் 26 முதல் 45 ஆண்டுகளுக்கு முன்பு பதிக்கப்பட்டவை. நகரின் தற்போதைய குடிநீர் தேவைக்கு மேற்கண்ட குழாய்கள் போதுமானதாக இல்லை.

தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் வகையில் புதிய குடிநீர் திட்டம் மேம்பாட்டுத் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும் என தமிழ்நாடு அரசின் சட்டப்பேரவை அறிவிப்பு எண:01 / 12-13-ல் அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 09-12-11 அன்று நடைபெற்ற நீர் பகிர்மான குழுவின் தொழில்நுட்ப உதவி குழுவின் கூட்டத்தில் தேனி – அல்லிநகரம் நகராட்சி குடிநீர் பயன்பாட்டிற்கு 17-ம் ஆண்டிற்கு தேவைப்படும் 14.65 MLD தண்ணீரில் தற்போதுள்ள குடிநீர் ஆதாரங்களில் குறைவாக கிடைக்கும் தண்ணீரை வைகை அணையின் எடுப்பணையிலிருந்து எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 45-ம் ஆண்டு 1,55,000 மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு நாள் ஒன்றுக்கு .93 MLD என வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ்காணும் இடங்களில் இத்திட்டத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு வரப்படுகிறது.

1) பாலன் நகர் 7.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு

| | | |
|---|---|---|
| | | உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி |
| 2) | நக்கன்ஜி காலனி | 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி |
| 3) | கே.ஆர்.ஆர் நகர் | 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி |
| 4) | கருவேல்நாயக்கன்பட்டி | 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி |

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ2) துறை அரசாணை எண்: 12 நாள்: 28-01-13-ல் ரூ.68.83 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்திட கீழ்க்கண்ட நிதிப் பகிர்வில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| TNUDP-III மற்றும் TNUDF கடன் | ரூ. 41.30 கோடி |
| TNUDP-III மான்யம் | ரூ. .65 கோடி |
| நகராட்சி மற்றும் பொது மக்கள் பங்களிப்பு | ரூ. 6.88 கோடி |
| மொத்தம் | ரூ. 68.83 கோடி |

மேற்கண்ட பணி இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு சிப்பம்-1 மற்றும் சிப்பம்-2 பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பணிகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் மேற்கண்ட திட்டத்தினை 21.02.-ம் தேதியன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு நாளது தேதிவரை நகராட்சியின் தொடர் பராமரிப்பில் இருந்து வருகிறது.

மேற்கண்ட புதிய குடிநீர் திட்ட பணி செயல்பாட்டின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் நகரில் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

<u>பாதாளச் சாக்கடைத் திட்டம்</u>

- தேனி – அல்லிநகரம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் 11–ன்படி மக்கள் தொகை 94453 ஆகும். இந்நகராட்சியில் மொத்தமுள்ள 33 வார்டுகளில் உள்ள சாலைகளின் நீளம் 107.162 ஆகும்.
- தேனி மாவட்டம், தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.237 நாள். 11.12.07–ல் ரூ. 35.27 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன் பின்பு குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 132 நாள். 28.02.11 வாயிலாக ரூ.42.09 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.
- இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் ஐஐஐ கீழ் ரூபாய் 16.29 கோடி மானியமாகவும், ரூபாய் 12.51 கோடி கடனாகவும், மீதமுள்ள ரூபாய் 13.29 கோடி உள்ளாட்சி அமைப்பின் பங்கு ஆகும்.
- இத்திட்டத்தில் 59.423 கி.மீ தூரம் கழிவு நீர் குழாய்களும், 2709 மனித ஆய்வு குழிகளும் 4 கழிவு நீருந்துகளும், 1 பிரதான பம்பிங் நிலையம் , 3.77 கி.மீ தூரம் பம்பிங் குழாய்களும் 12.05 எம்.எல்.டி திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கருவேல்நாயக்கன் ( மதுரை சாலை ) அமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 08.06.15 மாண்புமிகு தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்டது.

- 01.07.15 அன்று முதல் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
- மொத்தமுள்ள 11114 வீட்டிணைப்புகளில் இதுவரை 9851 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 8.00 எம்.எல்.டி கழிவு நீர் தினமும் பெறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு பொதுப்பணித்துறைக்கு சொந்தமான தாமரைக்குளத்தில் கலக்கப்பட்டு விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- மொத்தமுள்ள 33 வார்டுகளில் 7 வார்டுகள் முழுமைக்கும் மற்றும் 26 வார்டுகள் பகுதிக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.
- மீதமுள்ள வார்டுகளுக்கு 26 வார்டு ( பகுதிக்கும் ) முழுமைக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.67.76 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>12) கணினி மயமாக்குதல்</u>

நகராட்சியின் செயல்பாடுகள் அனைத்தையும் கணிப்பொறி மூலம் செயல்படும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் மின் ஆளுமைப் பணிகளை (E-Governance) நடைமுறைப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், அலகு(II) (TNUDP-II) மூலம் கணினிகள், பிரிண்டர்கள், UPS – சாதனம் மற்றும் மென் பொருட்கள் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.06.1999–ம் நாளிட்ட ந.க.எண். 19543/98/OP–1 செயல்முறை உத்திரவின்படி கணினி உதவி திட்ட அமைப்பாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

இந்நகராட்சியில் அலுவலக கணினி, இன்டர்நெட் இணைப்பின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மின் அஞ்சல்(E/Mail) முகவரி commr.theni@tn.gov.in ஆகும். இதன் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், அரசு அலுவலகங்களில் இருந்து மின்அஞ்சல் மூலம் தபால்கள் உடனுக்குடன் பெறப்பட்டும் அதற்கான பதில்களை இ–மெயில் மூலம் அனுப்பப்பட்டும் வருகிறது.

இந்நகராட்சியில் 16–17ம் ஆண்டு முதல் UTIS (Urban Tree Information system) நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இப்புதிய மென்பொருள் மூலம் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல், வருவாய் இனங்களான சொத்துவரி, தொழில்வரி, குத்தகை, குடிநீர் கட்டணம் ஆகியவற்றின் வசூல் பணி, இதர கட்டண வசூல் (சிட்டா வசூல்), அசையும் சொத்துகள், அசையா சொத்துகள், கட்டிட அனுமதி வழங்குதல், நகராட்சியின் வரவு–செலவு கணக்குகள் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி அலுவலகம் மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் கணினி வசூல் மையங்கள் அமைக்கப்பட்டு On Line முறையில் சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் இதர கட்டண வசூல் (சிட்டா வசூல்) கணினி மூலம் மட்டுமே வசூல் செய்யப்பட்டு வருகிறது.

பிறப்பு இறப்பு, இறந்து பிறந்த குழந்தைகள் பதிவுகள் அனைத்தும் அவ்வப்போது பதியப்பட்டு சான்றிதழ்கள் அனைத்தும் கணினி மூலம் நகல் எடுக்கப்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. பிறப்பு இறப்பு சான்றிதழ் 17ஆம் ஆண்டு வரை https://tnurbanseva.tn.gov.in என்ற இணையவழி வழியாக வழங்கப்படுகிறது. 18 ஆம் ஆண்டிலிருந்து http://gccapp.chennaicorporation.gov.in என்ற இணையவழி வழியாக பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கப்படுகிறது

பொதுமக்கள் https://tnurbanepay.tn.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக மூலம் பிறப்பு இறப்பு சான்று பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த இணையதளம் வழியாக பொதுமக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி,

வரியற்ற இனங்கள் மற்றும் தொழில் உரிமக் கட்டணம் போன்றவற்றை செலுத்தி ரசீது எடுத்துக் கொள்ளும் வகையிலும், புதிய தொழில் வரி, புதிய தொழில் உரிமக் கட்டணம், கட்டிட அனுமதி போன்றவற்றை விண்ணப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி சான்றிதழ்கள், பதிவு பெற்ற வரைவாளர்கள் மூலம் online வழியாக கணினியில் பதியப்பட்டு அலுவலகத்திற்கு கணினி வழியாகவே அனுப்பப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இந்நகராட்சியின் இணையதள முகவரி https://tnurbantree.tn.gov.in/theni ஆகும். இதில் பொதுமக்களுக்கு தேவையான நகராட்சி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. நகர்மன்ற கூட்டத் தீர்மானங்கள் இணையதளத்தில் மாதவாரியாக பதியப்பட்டு வருகிறது. மக்களின் குறைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் தெரிவிக்க அதிகாரியின் அலைபேசி மற்றும் துறை அதிகாரிகள் விபரம் இணையதளத்தில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

## 13) ஆய்வு மாளிகை

நகராட்சிக்கு சொந்தமான பொம்மையகவுண்டன்பட்டி கதவு எண் .137–ல் மேல் நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் நவீன வசதிகள் கொண்ட 2 அறைகள் உள்ள ஆய்வு மாளிகை கட்டப்பட்டு , தற்பொழுது ஒரு அறையினை மாற்றி அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. தங்கும் விடுதிக்கான உபவிதிகள் தயார் செய்யப்பட்டு, மதுரை மாவட்ட அரசிதழில் 08.08.1985 ஆம் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

### தங்கும் விடுதி

மேற்கண்ட ஆய்வு மாளிகை தவிர நகராட்சிப் பேருந்து நிலையத்தில் முதல் மாடிக்கட்டிடத்தில் பயணிகள் தங்கும் விடுதி (19 அறைகள் கொண்டது) நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்தது. பின்னர் கட்டண வசூல் செய்யும் உரிமையை பொது ஏலத்தில் விட நகர்மன்றம் தனது 29.10.21 ஆம் தேதியை 39 எண்ணிட்ட தீர்மானத்தில் ரூ.9,30,000/– குத்தகைக்கு விட முடிவு செய்யப்பட்டது. அதன்படி பொது ஏலம் விடப்பட்டு கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

## 14) விளக்கு வசதிகள்

இந்நகராட்சியில் மொத்தம் 3902 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டுஉள்ளது. தெருவிளக்குகள் பராமரிப்பினை தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | விபரம் | அறிக்கை ஆண்டு (24–25) |
|---|---|---|
| 1. | எல்.இ.டி | 3902 |
| | **மொத்தம்** | **3902** |

தெருவிளக்குகள் 24 – 25 – ம் ஆண்டிற்கு தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்த வகையில் ஆண்டுக்கு ரூ.30.00 இலட்சம் அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 15) ஆரம்பக்கல்வி

நகராட்சியில் பராமரிக்கப்பட்டுவந்த இரண்டு நகராட்சிப் பள்ளிகளும் 09-03-1990 தேதிய கல்வித் துறையின் 347 ம் எண் அரசாணையில் கண்டுள்ள அறிவுரைப்படி . நிர்வாகம் கல்வித்துறை பராமரிப்புக்கும், பள்ளிக்கட்டிடம் நகராட்சியின் பராமரிப்பிலும் இருந்து வருகிறது. இதுதவிர தனிப்பட்டோர் ,மற்றும் அரசு நிர்வாகத்தின் கீழ் கீழ்கண்ட பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

1) நகராட்சி துவக்கப்பள்ளி

2) நகராட்சி துவக்கப்பள்ளி

3) பி.சி. துவக்கப்பள்ளி ,தேனி

4) என்.எஸ்.துவக்கப்பள்ளி

5) என்.ஏ.கே.துவக்கப்பள்ளி

6) அரசு கள்ளர் துவக்கப்பள்ளி

7) மகாராஜா துவக்கப்பள்ளி

8) ஆதிதிராவிடர் நலப்பள்ளி

9) மீனாட்சி துவக்கப்பள்ளி

10) செல்லம்மாள் அம்பிகாபதி நடுநிலைப்பள்ளி

16) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கல்வி சத்துணவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒரு உதவியாளர் உடன் கணக்கரும், 8 பள்ளி சத்துணவு அமைப்பாளர்களும், 27 சமையலர் / சமையல் உதவியாளர்களும் 31–3–25 வரை பணிபுரிந்து வருகிறார்கள். 01–8–1991 முதல் ஊட்டச்சத்து ணவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு , தனித்துறையாக இயங்கிவருகிறது.16–10–1997 முதல் நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளும் மேற்படித்திட்டத்தை நகராட்சியில் நிர்வாக கட்டுபாட்டிற்கு கொண்டு வரப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

அறிக்கையாண்டில் நகராட்சி எல்லையில் உள்ள அனைத்து பள்ளிகளில் உள்ள ஏழை மாணவ , மாணவியர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கல்வி சத்துணவுத்திட்டத்தின் கீழ் 4341 குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கப்பட்டு வருகிறது.

17) இட வசதிகளும் கருவிகளும்

நகராட்சி ஆரம்பப்பள்ளி கட்டிடங்கள் இரண்டும் ,நகராட்சி பராமரிப்பிலேயே தொடர்ந்து இருந்து வருகிறது. இட வசதி போதுமான அளவு உள்ளது.

18) ஆரம்பக்கல்வி

ஆரம்பக்கல்வி நிதிக்கணக்கின் கீழ் சென்றாண்டில் வருவாய் ரூ.38.10 லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் வருவாய் ரூ. 26.50 இலட்சம் மட்டும்.

அறிக்கையாண்டிலும் அதற்கு முன்னும் சொத்துவரியுடன் கல்வி வரியும் கீழ்கண்டவிபரப்படி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது.

1) சொத்துவரியில் ஆண்டு ஒன்றிற்கு, சொத்தின் ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் 2.5 சதவீதம் ஆகும்.

2) காலியிட வரி சொத்து மதிப்பின் பேரில் ஆண்டு ஒன்றுக்கு 1/16 சதவீதமாகும்.

19) உயர்நிலை கல்வி

சென்றாண்டைப் போலவே அறிக்கையாண்டிலும், நகர் மன்றத்தால், உயர்நிலைப்பள்ளிகள் ஏதும் நடத்தப்படவில்லை. நகராட்சி எல்லைக்குள் கீழ்கண்ட பள்ளிகள் நடைபெற்றுவருகிறது.

1) முத்தையா உயர்நிலைப்பள்ளி
2) என்.ஏ.கே.உயர்நிலைப்பள்ளி
3) ஆர்.சிநடுநிலைப்பள்ளி
4) பத்மநாபன் நடுநிலைப்பள்ளி
5) அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி
6) பி.சி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி
7) என்.எஸ்.ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
8) என்.எஸ். பெண்கள் மேல்நிலைப்பள்ளி
9) அரசு மேல்நிலைப்பள்ளி

) பிரத்யேக பள்ளிகளும்,பொது நூல் நிலையங்களும்

இந்நகராட்சி பிரத்யேகப்பள்ளி, ஏதும் பராமரிக்கப்படவில்லை. நூலக ஆணைக்குழுவினரால் , ஒரு நூலகம் நடத்தப்பட்டுவருகிறது. கட்டிடங்கள் மீது விதிக்கப்பட்ட சொத்துவரியில் ரூபாய்க்கு 10 சதவீதம் நூலக வரியாக வசூலிக்கப்படுகிறது. சென்றாண்டில் ரூ.35.91 இலட்சம் அறிக்கையாண்டில் ரூ. 36.87இலட்சம் வரவாகி உள்ளது. நூலக வரி தொகையினை மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு செலுத்தப்படுகிறது.

## பொது சுகாதாரம்

1) மருத்துவமனை

இந்நகராட்சியில் செல்வி.க.கவிப்ரியா, நகர் நல அலுவலராக 01.04.24 முதல் பணிபுரிந்து வருகிறது.

பிறப்பு விகிதமும் மகப்பேறு உதவியும்

பயிற்சி பெற்ற ஐந்து துப்புரவு ஆய்வாளர்களால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பணி பார்க்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் 2368 பிறப்புகளும், 2347 அறிக்கையாண்டில் பிறப்புகளும் பதிவாகியுள்ளது. பிறப்பு விகிதம் சென்றாண்டில் 24.9 சதவீதம் அறிக்கையாண்டில் 24.7 சதவீதம் ஆகும்.

| பொது சுகாதாரப்பிரிவின் பணியமைப்பு | | |
|---|---|---|
| சுகாதார ஆய்வாளர்கள் | | 5 |
| துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | | 10 |
| ஓட்டுநர்கள் | | 9 |
| களப்பணி உதவியாளர் | | 1 |

இறப்பு சென்றாண்டில் 924 ,அறிக்கையாண்டில் 473 ம் பதிவாகியுள்ளது.இறப்பு விகிதம் சென்றாண்டில் 6.05 சதவீதம் அறிக்கையாண்டில் 5.1 சதவீதம் ஆகும்.

சென்றாண்டில் 559 பிறப்புக்களும், அறிக்கையாண்டில் 492 பிறப்புகளும் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சென்றாண்டில் 2368 பிறப்புகளும், அறிக்கையாண்டில் 29 பிறப்புகளும் பார்க்கப்பட்டது.

| வருடம் | நகராட்சி மருத்துவமனையில் | அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் | பயிற்சி பெறாத உதவியாளர்கள் மூலம் |
|---|---|---|---|
| 24–25 | 385 | 14 | 11 |

சென்றாண்டில் 2368 பிறப்புகளும், அறிக்கையாண்டில் 2347 பிறப்புகளும் பயிற்சி பெற்ற துப்புரவு ஆய்வாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>இறப்பு விகிதமும் தொற்று நோயும்</u>

அ) சென்றாண்டைப்போலவே அறிக்கையாண்டில் தொற்று நோய்களினாலும் , கொள்ளை நோய்களினாலும் இறந்தோர் இல்லை. இதர நோய்களினால் இறந்தோர் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நோய்கள் | அறிக்கையாண்டு 24-25 |
|---|---|---|
| 1. | சுவாச நோய் | 21 |
| 2. | இதர நோய்கள் | 471 |
| | மொத்தம் | 492 |

ஆ) அறிக்கையாண்டில் காலரா ஏதுமில்லை

**வயிற்றுப்போக்கு**

அறிக்கையாண்டில் 115 பேருக்கு வயிற்றுப்போக்கு நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளனர். இறப்பு ஏதுமில்லை.

| பிறப்பு விபரம் | பதிவுகள் | சதவீதம் |
|---|---|---|
| 20–21 | 85 | 24.70 |
| இறப்புகள் | | |
| 21–22 | 557 | 5.83 |

மலேரியா தடுப்பு – கொசு ஒழிப்புத் திட்டம்

கொசு ஒழிப்புத் இத்திட்டத்தின் கீழ் ஒரு களப்பணியாளரும், ஆறு மருந்து தெளிக்கும் தொழிலாளர்களும், கூடுதல் பணியாக இப்பணியை பார்க்கும் ஒரு துப்புரவு ஆய்வரின் மேற்பார்வையில் பணியாற்றி வருகின்றனர். சென்றாண்டில் ரூ 12,28,300/–ம் அறிக்கையாண்டில் ரூ11,15,175/–ம் செலவு செய்யப்பட்டது.

துப்புரவு (அ) பாதுகாப்பு

சென்றாண்டிலும், அறிக்கையாண்டிலும் 33 நவீன கழிப்பறைகளும், நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குச்சொந்தமான கிழக்குச் சந்தையில் கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடம் தொடர்ந்து உபயோகத்தில் இருந்து வருகிறது. இக்கழிப்பிடத்தை பொது ஏலம் வாயிலாக குத்தகைக்கு விடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகரில் 30684 வீடுகள் உள்ளன, அவற்றில் 29824 வீடுகளில் கழிப்பிடங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

நகரில் உருவாகும் குப்பைகளை, பேட்டரி வாகனம் மற்றும் இலகு ரக வாகனங்கள் மூலம் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு மக்கும் குப்பைகளை பசுமை உரக்குடில்களில் (MCC) உரமாக மாற்றப்படுகிறது. விற்பனைக்கு இயலாத குப்பைகளை சேகரிக்கப்பட்டு குப்பைகள் சேகரிக்கும் கிடங்கிற்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

<u>கலவை உரம்</u>

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு நகரிலிருந்து சுமார் 8 கி.மீ தூரத்தில் தேனி–குமுளி மெயின் சாலை உப்பார்பட்டி விலக்கு அருகே 19.09 ஹெக்டேரில் புதிதாக வாங்கப்பட்டுள்ள கலவை உரக்கிடங்குக்கு கொண்டு செல்லப்படுகிறது. புதிய கலவை உரக்கிடங்கில் தண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் முடிவுற்றவுடன் கலவை உரம் தயாரிக்கும் பணி துவக்கப்படும்.

| மாதிரி எடுக்கப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கை | ஆய்வுக்கு அனுப்பி முடிவு தெரிவித்த எண்ணிக்கை | கலப்படம் என அறிவிக்கப்பட்டவை | கலப்படம் அல்லாதவை என அறிவிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| 24–25 | – | – | – |

<u>இ) அச்ச மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள்</u>

இத்தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட தொழில்கள் அனைத்திற்கும் , உரிமையாணை கட்டணம் வசூலிக்கப்பட்டு பொது நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன என பார்வையிடப்பட்டு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் சென்றாண்டிலும், அறிக்கையாண்டிலும் முறையே பலவகைப்பட்ட தொழிலுக்கும் உரிமையாணை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவரப்படுகிறது. அறிக்கையாண்டில் உரிமையாணைகளுக்கான தொகையாக ரூ. 622830/– வரவாகியுள்ளது.

<u>குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல்</u>

1) நாடு தழுவிய தடுப்பூசி போடும் திட்டம்

(Universal Immunisation Programme)

இந்நகராட்சியில் மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு உதவியுடன் தடுப்பூசித்திட்டம் செயல்பட்டுவருகிறது. இதில் போலியோ சொட்டு மருந்து , தொண்டை அடைப்பான் தடுப்பூசி , மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு ரண ஜன்னி தடுப்பூசி மருந்துகள் , நகராட்சி மகப்பேறு உதவியாளர்களால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும்,இத்திட்டத்தில் உள்ளூர் தனியார் மருத்துவமனைகள், நகராட்சி அலுவலகத்தில் இருந்து தடுப்பு மருந்துகளைப் பெற்று குழந்தைகளுக்கும் , தாய்மார்களுக்கும் கொடுத்து வருகின்றன.

இதில் 21–22 ஆம் ஆண்டில் கீழ்கண்டவாறு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

| Public Vaccination | Child | ANC |
|---|---|---|
| URBAN PH-I | 400 | 465 |
| URBAN PH-II | 630 | 680 |
| TOTAL | 1030 | 1145 |

<u>ஈ) (2) பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம்</u>

பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் 6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது . மேற்படி திட்டத்தின் கீழ் துணை இயக்குநர் மருத்துவ நலம் , தேனி மூலம் மருந்துகள் பெறப்பட்டும் நகராட்சி நிதியிலிருந்து தேவையான மருந்துகள் பெறப்பட்டும், குழந்தைகளுக்கும், கர்ப்பிணி தாய்மார்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் சராசரி 80 முதல் 100 வரை நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மேற்படி மருத்துவ மையத்தில் 385 பிரசவங்கள் பார்க்கப்பட்டது.

<u>உ) சந்தைகளும் விழாக்களும்</u>

இந்நகராட்சி எல்லைக்குள் பிரசித்தி பெற்ற விழாக்கள் இந்நகருக்கு ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வீரப்ப அய்யனார் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இவ்விழாவிற்கு நகருக்கு வெளியே இருந்து 50,000– க்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர். இவ்விழா பதிவு

பெறாத விழாவாகும். ஆகையால் நகராட்சிக்கு எந்த வருவாயும் இல்லை. ஆனாலும் பொது சுகாதாரம் துப்புரவு வசதிகள் செய்யப்பட்டு வருகிறது.

<u>ஊ) ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம்</u>

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித்திட்டம் II ன் கீழ் , இந்நகராட்சியில் 7 இடங்களில் ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு , அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை பெண்கள் அமைப்பு சார்ந்த குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.62.00 லட்சத்தில் ,செலவினம் மேற்கொண்ட தொகை ரூ.55.42 லட்சத்திற்கு அரசின் மானியம் பெறப்பட்டுள்ளது.

நகராட்சியில் பெண்கள் குழுக்கள் மூலம் செயல்படும் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் விபரம்

| வ.எண் | (குப்புறவு வளாகம்) வேலையின் விபரம் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பள்ளிவாசல் தெரு, தேனி | 10.0 |
| 2. | முத்துராமலிங்கம் தெரு,கருவேல்நாயக்கன்பட்டி | 10.00 |
| 3. | கம்போஸ்ட் ஓடைத்தெரு, தேனி | 10.00 |
| 4. | சோலைமலை அய்யனார் கோவில் தெரு, தேனி | 10.00 |
| 5. | மட்டன் ஸ்டால் வடக்கு புதுத்தெரு,அல்லிநகரம் | 7.00 |
| 6. | சொக்கமன் குளத்து தெரு,அல்லிநகரம் | 5.00 |
| 7. | வெங்களா நகர்,அல்லிநகரம் | 10.00 |
| | மொத்தம் | 62.00 |

நகராட்சியில் பெண்கள் குழுக்கள் மூலம் செயல்படும் வாம்பே சுகாதார வளாகம்

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு ரூ.(லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கிழக்குச்சந்தை வளாகம் | 4.00 |
| 2 | மேற்குச்சந்தை வளாகம் | 4.00 |
| 3 | அல்லிநகரம் கக்கன்ஜி நகர் | 4.00 |
| 4 | தேனி தியாகி விஸ்வநாததாஸ் நகர் | 4.00 |
| 5 | உழவர்சந்தை | 4.00 |
| 6 | சிவராம் நகர் | 4.00 |
| 7 | வள்ளுவன் வாசுகி காலனி | 4.00 |
| 8 | பாலன் நகர் | 4.00 |
| 9 | அல்லிநகரம் பேருந்து நிலையம் | 4.00 |
| 10 | தெற்கு புதுத்தெரு | 4.00 |
| 11 | ஒண்டிவீரன் காலனி | 6.00 |

மேற்கூறப்பட்ட 18 துப்புரவு வளாகமும் , பெண்கள் சுய உதவிக்குழுக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு பயன்படுத்தி பராமரிக்கப்பட்டு வருகிறது.

இச்சீரியதிட்டத்தால் நகர பொது சுகாதாரம் காக்கப்படுவதுடன், நகரத்தின் பெண்கள் பாதுகாப்புக்கான பொது சுகாதாரம் காக்கப்படுகிறது.

2ஏ) பொது சமுதாயக்கூடம்

இந்நகராட்சியில் பெரியகுளம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 6.75 லட்சம் ஒதுக்கீட்டில் தேனி ,சமதர்மபுரத்தில் அனைத்து சமுதாயத்தினருக்கும் பயன்படும் வகையில் சமுதாயக்கூடம் பொது நிகழ்ச்சிக்காக அனைத்து சமுதாயத்தினருக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

புதிய பேருந்து நிலையம் அமைத்தல்

தேனி அல்லிநகரம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகவும் மாவட்ட தலைநகரமாகவும் அமைந்துள்ளது. இந்நகராட்சியின் மக்கள் தொகை 94,423 ஆகும். நகரின் பரப்பு 22.23 சதுர கி.மீ ஆகும். நகராட்சி 33 வார்டுகளைக் கொண்டது.

தேனி அல்லிநகரம் நகராட்சியில் தற்போது வார்டு எண் 29 கம்பம் சாலையில் 14 பேருந்து நிறுத்துமிடத்துடன் கூடிய பி கிரேடு பேருந்துநிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பேருந்துநிலையம் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது . தற்போது நகரின் அதிகப்படியான பேருந்து போக்குவரத்து காரணமாக பேருந்து நிலையத்தில் வாகன நெரிசல் ஏற்பட்டதை கருத்தில் கொண்டு தேனி– பெரியகுளம் புறவழிச்சாலையில் சிட்கோ பின்புறம் உள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

தேனி – பெரியகுளம் புறவழிச்சாலையில் வனத்துறைக்கு சொந்தமான RF No,3 வால்கரடு பகுதியில் சுமார் 7.35 ஏக்கர் நிலப்பரப்பில் ஏ கிரேடு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைஅரசாணை எண்.119 நாள் . 21.06.10 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பேருந்து நிலையத்தில் 59 பேருந்து நிறுத்துமிடங்கள் , 2 உணவகங்கள், 67 கடைகள்,2 பயணிகள் காத்திருப்பு அறைகள், 1 கட்டண கழிப்பறை , 6 பொது கழிப்பிடம், 3 வாகன நிறுத்துமிடம், 1 பயணச்சீட்டு முன்பதிவு அறை, விசாரணை மற்றும் வரவேற்பு அறை, காவல் கட்டுப்பாட்டு அறை, ஓட்டுனர் மற்றும் நடத்துனர் ஓய்வு அறை, போக்குவரத்து துறை அலுவலகம் , நேரக்காப்பாளர் அறை, 1 பொருள் பாதுகாப்பு அறை, குடிநீர் வசதி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ. 1,525.00 செலவிடப்பட்டுள்ளது.

| வ.எண் | நிதி விபரம் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அரசு மான்யம் | 100.00 |
| 2 | TNUDF-கடன் | 850.00 |
| 3 | நகராட்சி பங்கு | 575.00 |
| | மொத்தம் | 1,525,00 |

தற்போது புதிய பேருந்து நிலையத்தின் அனைத்து பணிகளும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது

தீ– பாதுகாப்பு

அ) இந்நகரில் தீயணைப்பு படை 16.05.1975 ம் தேதியில் அமைக்கப்பட்டு நன்கு செயல்பட்டுவருகிறது.

அ) அறிக்கையாண்டில் நாய் கடித்து ஒருவரும் இறக்கவில்லை.

ஆ) இந்நகரில் எல்லையில் கீழ்கண்ட இடங்களில் இடுகாடும், சுடுகாடும் உள்ளது.

1) பொம்மையகவுண்டன்பட்டி நகராட்சி குடியிருப்பு வடகிழக்கில் இடுகாடு உள்ளது.

2) தேனி,பள்ளிவாசல் தெரு மேற்குப்பக்கத்தில் இடுகாடும், சுடுகாடும் உள்ளது.

3) கருவேல்நாயக்கன்பட்டி ,கிழக்குபக்கம் இடுகாடும், சுடுகாடும் உள்ளது.

4) அல்லிநகரம் அருந்ததியர் இடுகாடு

5) தேனி, ஆற்றங்கரை ஆதிதிராவிடர் இடுகாடு

பொது

சென்றாண்டைப் போலவே அறிக்கையாண்டில் வருவாய் தரும் இனங்களின் அதிக வரவு வந்துள்ளது.

போக்குவரத்து

சென்றாண்டைப் போலவே அறிக்கையாண்டிலும் மேற்கண்ட இனங்கள் ஏதும் நகராட்சியால் நடத்தப்படவில்லை. அரசு போக்குவரத்து ஊர்திகள் மற்றும் தனியார் ஊர்திகள் முக்கிய நகரங்களுக்கு சென்று வருகின்றன. இவைகள் அனைத்தும் தேனி அல்லிநகரம் நகராட்சி பேருந்து நிலையத்தின் வழியாக வந்து செல்கிறது. மதுரை, கன்னியாகுமரி, விருதுநகர், சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி போன்ற முக்கிய நகரங்களுக்கும் ஊர்திகள் செல்கின்றன. திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பேருந்தும் அண்டை மாநிலங்களுக்கு சென்றுவர மிகவும் உபயோகமாகவுள்ளது. இது தவிர சுற்றுப்புற கிராமங்களுக்கும் செல்ல நகரப் பேருந்து வசதியும் ,சிற்றுண்டி வசதியும் உள்ளது.

சந்தைகள், பேருந்து நிலையங்கள்

மேற்குறிப்பிட்ட இனங்களில் இருந்து கடந்த ஆண்டில் நகராட்சிக்கு கிடைத்துள்ள வருமானம் பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு | சந்தைகள் | பேருந்து நிலையம் | ஆடு அடிக்கும் தொட்டி | மரம் வளர்ப்பு |
|---|---|---|---|---|
| 24–25 | 27,25,000 | ,96,000 | 1,65,000 | – |

சென்றாண்டைப்போலவே அறிக்கையாண்டில் வாரச்சந்தை இந்நகராட்சியின் பராமரிப்பில் இருந்தது. மேற்படி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை சென்றாண்டில் 24,53,063/– ம் அறிக்கையாண்டில் ரூ.27,25,000/–ம் குத்தகைத் தொகையாக வரவாகியுள்ளது.

அங்காடிகள்

தேனி–அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24–25–ம் நிதியாண்டு களில் கீழ்க்கண்ட விபரப்படி கடைகள் இயங்கி வருகிறது. அறிக்கையாண்டில் கடை வாடகையாக வருமானம் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | கடை அமைவிடம் | கடை எண்ணிக்கை | ஆண்டு வருமானம் ரூ. (24–25) |
|---|---|---|---|
| 1 | கர்னல் ஜான் பென்னி குவிக் | 60 | 46,60,882 |
| 2 | காமராஜர் பேருந்து முனையம் | 68 | 28,01,511 |
| 3 | கிழக்கு சந்தை | 111 | 41,43,337 |
| 4 | மேற்கு சந்தை | 315 | 83,46,887 |

2) ஆடுவதை நிலையம்

சென்றாண்டைப்போலவே அறிக்கையாண்டிலும் ஆடுவதை நிலையம் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. சென்றாண்டில் ஆடு வதை நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை பொது ஏலம் விடப்பட்டதில் ரூ.110254/– அறிக்கையாண்டில் பொது ஏலம் விடப்பட்டதின் மூலம் ரூ. 136000/– வசூல் செய்யப்பட்டது.

அனுதினமும் வதை செய்யப்படும் ஆடுகள் அரசு கால்நடை மருத்துவரால் பார்வையிடப்பட்டு வருகிறது. அல்லிநகரத்தில் ஆறு காய்கறிகடைகளும் ,மூன்று கறிக்கடைகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கடைகளை இடித்து அறிக்கையாண்டில் புதிதாக வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நவீன கட்டணக் கழிப்பறை

இந்நகராட்சியில் அறிக்கையாண்டில் 10 கழிப்பிடங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இத்தலைப்பின் கீழ் ரூ.23,26,249 வரவினம் கிடைத்துள்ளது.

ஊ) தொழிற்சாலைகளும், தொழில்களும்

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள் | 32 |
| 2 | பருத்தி அரவை ஆலைகள் | 10 |
| 3 | மாவு ஆலைகள் | 16 |
| 4 | மரம் அறுவை ஆலைகள் | 04 |
| 5 | நூற்பு ஆலைகள் | 02 |

| | | |
|---|---|---|
| 6 | இதர ஆலைகள் | 60 |
| | மொத்தம் | 104 |

<u>நகரமைப்பு அபிவிருத்தி</u>

நகர நில அளவை

இந்நகராட்சியின் விரிவான நில அளவை வேலையை பூர்த்தி செய்யப்பட்டு, மதுரை மாவட்ட அரசிதழ் ஜூலை 1997 ஆம் ஆண்டு நில அளவைகளையும் எல்லைகளையும் குறித்த 8–வது சட்டம் 13–வது பிரிவின்படி அறிவிப்பு செய்யப்பட்டு புலப்படம் தயார் செய்து ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது. தற்போது நகரளவை பதிவேடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>முழுமைத் திட்டம்</u>

இந்நகராட்சிக்காக முழுமைத் திட்டத்தை நகர் ஊரமைப்புச் சட்டம் 26 ன் கீழ் பிரசுரம் செய்ய வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சித் துறையின் 07–11–1985 ம் தேதிய 1181–ம் எண் அரசாணை நகர் ஊரமைப்புச்சட்டம் 24(2) கீழ் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வலுவலக ந.க.எண்.10662/1985/எப்–1 , நாள் 08.03.1991 கடிதப்படி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் மீது அரசு தனது ஆணை எண் .1552 (வீடு மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை . நாள் 03–12–1991ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து தமிழ்நாடு அரசிதழில் வெளியீடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அரசிதழ் அறிவிக்கை நாள் 17.11.1993 பாகம் –1, பக்கம் –912ல் அறிவிக்கடச செய்யப்பட்டு முழுமைத் திட்டமானது புது நிலைபடுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நகர ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 24–ன் கீழ் இணக்கம் பெற மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் ந.க.எண்.5966/97/மை–4, நாள் 02.12.1999 கடிதத்தின்படி வழிமுறையாக அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டு , நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 24 (27ன் கீழ் அரசு ஆணை எண் 463, வீட்டு வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (புடி 4–2) நாள் 32.11.01 ல் இருந்து இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 26 மற்றும் முழுமைத்திட்டவிதி 7,8 மற்றும் 15ன்கீழ் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உள்ளூர் திட்ட குழுமத்தின் தீர்மான எண். 53, நாள் 15–05–02 ம் தேதியில் தீர்மானிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் 16.06.04 ம் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டது. மாவட்ட அரசிதழ் மற்றும் உள்ளூர் பத்திரிக்கையில்

ஆட்சேபனை மற்றும் ஆலோசனை கோரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளை உள்ளூர்திட்டக்குழு தீர்மானத்துடன் நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 28–ன்கீழ் அரசின் இறுதி ஒப்புதலுக்கு மதுரை, நகர் துணை இயக்குநர் வழியாக அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளன.

மேலும் தற்போது உள்ள நில உபயோகங்களின் படி முழுமைத்திட்டம் தயார் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கோரப்பட்டுள்ளது.

<u>நகரமைப்புத் திட்டங்கள்</u>

இந்நகராட்சியில் கீழ்கண்ட பதினொன்று நகரமைப்புத் திட்டங்கள் உள்ளன. 8 திட்டங்கள் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வரைவு நிலையில் உள்ளது. மீதமுள்ள 3 திட்டங்கள் இணக்கம் ஒப்புதல் பெற நடவடிக்கைகள் உள்ளது.

தேனி நகர் விரிவு அபிவிருத்தித் திட்டம் –1 (மொத்த விஸ்தீரணம் 164.96 ஏக்கர்)

நகரமைப்பு திட்ட விதிகளின் 11 வது விதியின் படி இத்திட்டம் அரசினின் 18–02–1943ம் தேதிய 3226 (பொது சுகாதாரம்) என்ற ஆணையின் விளம்பரப்படுத்தப்பட்டது. முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர் ஊரமைப்புஇயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் செயல்முறை ஆணை எண்.6807/1992/டிபி2, நாள் 07.02.1995 ன் படி இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது மேற்படி திட்டம் அமுலில் உள்ளது. மேலே கண்டுள்ள திட்டத்தில் உள்ள தொழில் பகுதி மற்றும் வணிகப் பகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் தற்போது குடியிருப்புகள் அதிகமாக அபிவிருத்தி அமைந்திருப்பதால் , அவைகளை குடியிருப்புப் பகுதியாக தற்போதுள்ள அபிவிருத்திக்கேற்ப நில உபயோக மாற்றம் செய்ய தீர்மானம் இயற்றப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(5332/1999/எப்1). திட்டத்தில் தற்போதுள்ள நிலப் பயன்பாட்டிற்கு ஏற்ப எதிர்கால அபிவிருத்திக்கு இணங்க புது நிலைப்படுத்த நகர் ஊரமைப்பு ஆணையரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அல்லிநகரம் தெற்கு விரிவு அபிவிருத்தித் திட்டம் –2 (மொத்த பரப்பு–257.86 ஏக்கர்)

நகரமைப்பு திட்ட விதிகளின் படி இத்திட்டம் அரசினின் 16–12–1973 ம் தேதிய 3226 (பொது சுகாதாரம் ) என்ற ஆணையின் விளம்பரம் செய்யப்பட்டது. தொடர்ந்து நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் ந.க.எண் .21349/1987/டி2, நாள் 19–09–1990 கடிதத்தில் நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 29ன்கீழ் நகர் ஊரமைப்பு அவர்களின் 21349–87–டிபி1 , நாள் 24–4–1991 செயல்முறை ஆணையின் விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் 2க்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவு பிறப்பித்துள்ளார். இதனைத் தொடர்ந்து 05–07–1991ம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழும் இறுதி ஒப்புதல் பற்றி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு , மேற்படி அபிவிருத்தி திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது . மேலே கண்டுள்ள திட்டத்தில் உள்ள தொழிற் பகுதி மற்றும் வணிகப் பகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் தற்போது, குடியிருப்புகள் அதிகமாகஅபிவிருத்தி அடைந்திருப்பதால் , அவைகளை குடியிருப்புப் பகுதியாக தற்போதுள்ள அபிவிருத்திற்கேற்ப புது நிலைப்படுத்த நகர் ஊரமைப்பு ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவிரிவு அபிவிருத்தித் திட்டம் எண் .3

தற்போதுள்ள நகரமைப்பு திட்டம் எண்.2–க்கு வடபுறமுள்ளதும் . தேனி பெரியகுளம் ரோட்டிற்கு கிழ்புறமுள்ளதும், தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு எல்லைக்குள் மேல்புறம் உள்ளதுமான சுமார் 133.85 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 19(1) பிரிவின்படி , நகரமைப்புத் திட்டம் எண்.3 என்று பிரகரம் செய்ய உள்ளூர்த்திட்டக்குழுமம் தனது 28–08–1984 ம் தேதிய 14–ம் எண் தீர்மானத்தில் முடிவு செய்துள்ளது. அதன்படி நகர் மன்றம் ஊரமைப்புச்சட்டம் விதி எண் 3ன்படி ,தினசரி செய்தித் தாள்களில் 31–01–1985 ல் மேற்கொள்ளப்பட்டு D.D.A (M.A) No.15/91 Map No.4, Approval on 01.04.1991 ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலே கண்டுள்ள திட்டத்தில் உள்ள தொழிற் பகுதி மற்றும் வணிகப்பகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . தற்போது குடியிருப்புகள் அதிகமாக அபிவிருத்தி அமைந்திருப்பதால் அவைகளை குடியிருப்பு பகுதியாக தற்போதுள்ள அபிவிருத்திக்கேற்ப நில உபயோக மாற்றம் செய்ய மன்ற தீர்மானம் எண்.999, நாள் 28–01–00 ன் தீர்மானம் இயற்றப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது(5332/1999/எப்1) மேற்படி திட்டத்தில் தற்போது உள்ள நில பயன்பாட்டிற்கு ஏற்ப எதிர்கால அபிவிருத்திக்கு இணங்க புதுநிலைப் படுத்த நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி வரைவு திட்டம் புது நிலைப்படுத்தப்பட்டு, சென்னை நகர் ஊரமைப்பு ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

4) விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் .4

தற்போதுள்ள நகரமைப்பு திட்டம் எண்.3–க்கு வடபுறமுள்ளதும் . தேனி பெரியகுளம் ரோட்டிற்கு கிழ்புறமுள்ளதும், தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு எல்லைக்குள்தென்புறமும் மேல்புறம் உள்ளதுமான சுமார் 10.03ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 19(1) பிரிவின்படி , நகரமைப்புத் திட்டம் எண்.4 என்று பிரசுரம் செய்ய உள்ளூர்த்திட்டக்குழுமம் தனது 23–08–1984 ம் தேதிய 14–ம் எண் தீர்மானத்தில் முடிவு செய்துள்ளது. அதன்படி நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் விதி எண்.3ன்படி முறைப்படி வெளியீடு செய்யப்பட்டது. அதன் பிரசுரம் முழுமைத் திட்டத்துடன் சரிபார்த்து உள்ளூர் திட்டக்குழுவின் 21–9–1990 ம் தேதிய 108 ம் எண்தீர்மானத்தின் இத்திட்டத்தை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இணக்கத்திற்கு சமர்ப்பித்து தீர்மானித்தது. அதன்படிஇவ்வலுவலக ந.க.எண். 4966/1989/எப்1, நாள் –10–1990 கடிதத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இணக்கத்திற்கு சமர்ப்பித்து தீர்மானித்தது. சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநத் அவர்களின் ந.க.எண்.3562/1991/டிபி1, நாள் 15.05.1991 செயல்முறை கடிதத்தில் இத்திட்டதிற்கு இணக்கம் வழங்கப்பட்டது. விரிவு அபிவிருத்தித்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் ஆலோசனை மற்றும் ஆலோசனை கோரும் அறிவிப்பினை தமிழ்நாடு அரசிதழில் 18–12–1991ல் விளம்பரம் செய்யப்பட்டதில், குறிப்பிட்ட காலத்தில் எவ்வித ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படாததால் , தொடர் நடவடிக்கை சட்டப்படி எடுக்கப்பட்டு உள்ளூர் திட்டக்குழுமத்தின் தகுந்த பரிந்துரையுடன் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் இறுதி ஒப்புதலுக்கு 23–3–1992 ல் அனுப்பி வைக்கப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் செயல்முறை ஆணை எண் .3262/1991/டிபி2, நாள் 30–06–1994 ன்படி விரிவு அபிவிருத்தித்திட்டம் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்படி திட்டம் தற்போது அமுலில் உள்ளது. மேலே கண்டுள்ள திட்டத்தில் உள்ள தொழிற் பகுதி மற்றும் வணிகப்பகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . தற்போது குடியிருப்புகள் அதிகமாக அபிவிருத்தி அமைந்திருப்பதால் அவைகளை குடியிருப்பு பகுதியாக தற்போதுள்ள அபிவிருத்திக்கேற்ப நில உபயோக மாற்றம் செய்ய அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது(5332/1999/எப்1) மேற்படி திட்டத்தில் தற்போது உள்ள நில பயன்பாட்டிற்கு ஏற்ப எதிர்கால அபிவிருத்திக்கு இணங்க புதுநிலைப் படுத்த நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி வை திட்டம் புது நிலைப்படுத்தப்பட்டு, சென்னை நகர் ஊரமைப்பு ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 5

. தேனி பெரியகுளம் ரோட்டிற்கு கீழ்புறமுள்ளதும், தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு எல்லைக்குள்தென்புறமும் மேல்புறம் உள்ளதுமான சுமார் 10.03ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 19(1) பிரிவின்படி , நகரமைப்புத் திட்டம் எண்.4 என்று பிரசுரம் செய்ய உள்ளூர்த்திட்டக்குழுமம் தனது 23–08–1984 ம் தேதிய 14–ம் எண் தீர்மானத்தில் முடிவு செய்யப்பட்டது. முறைப்படி தொடர் அனுப்பப்பட்டு , ந.க.எண் 25603/1995/டிபி2 நாள் , 01–10–1995 ன்படி இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முறைப்படி பிரசுரம் செய்யப்பட்டு தற்போது அமுலில் உள்ளது. நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 24(27ன்கீழ் அரசு ஆணை எண் .462, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (யுடி.4–2) நாள் 23–11–01ல் இருந்து அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் தற்போது உள்ள நிலப் பயன்பாட்டிற்கு ஏற்ப , எதிர்கால அபிவிருத்திக்கு இணங்க புதுநிலைப்படுத்த நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் .6

உள்ளூர்த் திட்டக்குழுமம் தனது 08–01–1968 தேதிய 77ம் எண் தீர்மானத்தில் நகரின் தென்பகுதியில் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 6 தயாரிக்க நகர் ஊரமைப்புச்சட்டம் 19ன் கீழ் தயார் செய்ய முடிவு செய்யப்பட்டு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்படி திட்டத்தை செயல்படுத்த நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இறுதி ஒப்புதல் வேண்டி, இவ்வலுவலக ந.க.எண். 909–88–எப்1, நாள் 10–09–1991 கடிதத்தின் பிரகாரம் குறிப்புகளுடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவர்களும் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9632–1990–டிபி2, நாள் 14–01–1992 ன்படி தினமணி நாளிதழிலும் ,22.7.1997 ம் தேதிய தமிழ்நாடு அரசிதழிலும், மேற்படி இறுதி ஒப்புதல் பற்றி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு மேற்படி அபிவிருத்தித் திட்டம் தற்போதுள்ள

பயன்பாட்டிற் கு ஏற்ப எதிர்கால அபிவிருத்திக்கு இணங்க புதுநிலைப்படுத்த நகர் ஊரமைப்பு ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்திக் திட்டம் எண். 7**

உள்ளூர் திட்டக்குழு தனது 08-01-1999ம் தேதிய 78ம் எண் தீர்மானத்தில் நகரில் தெற்குப்பகுதியிலும் , திட்டம் எண். 6 ம் கிழக்குப்பக்கமும், அமையுமாறு விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.7 நகர் ஊரமைப்பு திட்டம் 1971 பிரிவு 19ன் கீழ் தயார் செய்ய முடிவு செய்யப்பட்டு , முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களும் , செயல்முறை ந.க.எண்.33666/1989/டிபி2, நாள் 01-11-1991ன்படி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 29ன்கீழ் இறுதி ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மேற்படித்திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வலுவலகக்கடிதம் எண். 5332/1999/எப்-1 நாள் -11-00ம் தேதி வாயிலாக தற்போதுள்ள நிலப் பயன்பாடு மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கான வரைபடங்கள் புதுநிலைப் பயன்படுத்தப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வழியாக சென்னை, நகர் ஊரமைப்பு ஆணையரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்திக் திட்டம் எண். 8**

நகர் ஊரமைப்புச் சட்டம் 1971,பிரிவு 19(1) ன் கீழ் , தேனி அல்லிநகரம் உள்ளூர் திட்டக்குழும பகுதியில், தேனி பைப்பாஸ் சாலைக்கு கிழ்புறம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு மேல்புறமும் , மதுரை ரோட்டிற்கு வடபுறமும் . அமைந்துள்ள பகுதியை (265 ஏக்கரும் பரப்பளவு) புதிதாக விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்.8 என பெயரிட்டு , திட்டம் தயார் செய்வதற்கு உள்ளூர்த்திட்டக்குழுமம் தனது 30-07-04ம் தேதிய 316 ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து திட்ட அறிவிக்கையை , நாளிதழ் , மாவட்ட அரசிதழில் பிரசுரம் வெளியிடப்பட்டது. பின்னர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் , மேற்காணும் திட்டத்திற்கு வரைபடம் எண்.2 தயார் செய்து, திட்டச்சாலை ஒதுக்கீடு நில உபயோக ஒதுக்கீடுகளுடன் டிடிபி/டிசி (எம்.ஆர்) எண்.5/04 எண்ணிடப்பட்டு வரைபட தொகுப்பு பெறப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் 03-01-05 ம் தே நடத்தி திட்ட உபயோகங்கள் குறித்து, மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் நேரில் விளக்கம் அளித்தனர் , பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளை ,உள்ளூர்த்திட்ட குழுமம் தனது 07-02.05 ம் தேதிய 340 ம் எண் தீர்மானத்தில் பரிந்துரைத்து, சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயல்முறை நக.எண். 828/05/டி நாள் 5.10.05 உத்தரவில் இணக்கம் அளிக்கப்பட்டதை தொடர்ந்த , திட்ட அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழில் 26-04-06 ம் தேதி வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மீது பொது மக்களின் ஆட்சேபனை ஆலோசனைகள் கோரி , தினசரி நாளிதழில் பிரசுரம் மேற்கொள்ளப்பட்டது. அதை தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் படிவம் 10ல் பூர்த்தி செய்து உள்ளூர்த்திட்ட குழு தனது 464 நாள் 31-07-06 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க அனுமதியளித்ததை தொடர்ந்து இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது செயல்முறை ஆணை எண் .DDP (MR) DTCP No.22/05 Approved Roc. No.11581/07/DP2 நாள் 26.06.10 ன்படி இறுதி ஒப்புதல் வைக்கப்பட்டுள்ளது. இறுதி ஒப்புதல் குறித்து தமிழ்நாடு அரசிதழ் மற்றும் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டு மேற்படிதிட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்திக் திட்டம் எண். 9**

நகர் ஊரமைப்புச் சட்டம் 1971,பிரிவு 19(1) ன் கீழ் , தேனி அல்லிநகரம் உள்ளூர் திட்டக்குழும பகுதியில், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு மேல்புறமும் , மதுரை ரோட்டிற்கு வடபுறமும் , அமைந்துள்ள பகுதியை (95ஏக்கரும் பரப்பளவு விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்.9 என பெயரிட்டு , திட்டம் தயார் செய்வதற்கு ,உள்ளூர்த்திட்டக்குழுமம் தனது 07-02-05 ம் தேதிய 343 ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து திட்ட அறிவிக்கையை , நாளிதழ் , மாவட்ட அரசிதழில் பிரசுரம் வெளியிடப்பட்டது. பின்னர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் , மேற்காணும் திட்டத்திற்கு வரைபடம் எண்.2 ,மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.

5271/04/மம4 நாள் 27.09.05 கடிதத்தின் படி, வரைபடம் எண் 2ன் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 28.11.05 தேதிய நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தி ஆட்சேபனை ஆலோசனைகள் பெற்று உள்ளூர்த்திட்ட குழு தனது 30–12–06 ,406 ம்எண் தீர்மானம் நிறைவேற்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 10</u>

நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 1ன் கீழ் ,விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்.10 க்கு மேல்புறமும் அமைந்துள்ள வீரப்ப அய்யனார் கோவில் பாதைக்கு வடபுறமும் அமைந்த பகுதியில் 130.36 ஏக்கர் நிலப்பரப்பளவு கொண்ட பகுதியை விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்.10 எனப் பெயரிட்டு திட்டம் தயார் செய்வதற்கு , உள்ளூர்த்திட்டக்குழுமம் தனது 07–02–05 ம் தேதிய 344 ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து திட்ட அறிவிக்கையை , நாளிதழ் , மாவட்ட அரசிதழில் பிரசுரம் வெளியிடப்பட்டது. பின்னர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் , மேற்காணும் திட்டத்திற்கு வரைபடம் எண்.2 ,மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண். 561/ 05/மம4 நாள் 18–10–05 கடிதத்தில், திட்ட வரைபடம் 2 ற்கு ஒப்புதல் வழங்கியபின் பேரில், நில உரிமையாளர்கள் கூட்டம் 28–11–05ம் தேதி 407ல் தீர்மானம் நிறைவேற்றி சென்னை ,நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயல்முறைக்கு அனுப்பப்பட்டு , நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை , செயல்முறை ஆணை எண் onserted U/S 25 of the T& CP Act and Numbered as Mat No.3 DDP (MR) DTCP No.02/11 Proc/Roc.No./26465/06/DP2 , நாள் 7.03.11 ன்படி இணக்கம் அளித்துள்ளார், இணக்கம் அளித்ததை தொடர்ந்து திட்ட தொகுப்பினை தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்து பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பெறப்பட்டு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் அணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 11</u>

நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 1ன் கீழ் ,விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்.11 க்கு மேல்புறமும் அமைந்துள்ள வீரப்ப அய்யனார் கோவில் பாதைக்கு வடபுறமும் அமைந்த பகுதியில் 102,07 ஏக்கர் நிலப்பரப்பளவு கொண்ட பகுதியை விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்.11 எனப் பெயரிட்டு திட்டம் தயார் செய்வதற்கு , உள்ளூர்த்திட்டக்குழுமம் தனது 07–02–05 ம் தேதிய 345 ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து திட்ட அறிவிக்கையை , நாளிதழ் , மாவட்ட அரசிதழில் பிரசுரம் வெளியிடப்பட்டது. பின்னர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் , மேற்காணும் திட்டத்திற்கு வரைபடம் எண்.2 ,மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண். 832/05/எப் 1 நாள் 18–10–05 கடிதத்தில், திட்ட வரைபடம் 2 ற்கு ஒப்புதல் வழங்கியபின் பேரில், நில உரிமையாளர்கள் கூட்டம் 28–11–05ம் தேதி நிறைவேற்றி சென்னை ,நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயல்முறைகளின் படி ஆட்சேபனை , ஆலோசனைகள் பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

<u>நகரமைப்புப் பணியாளர்கள்</u>

நகரமைப்புப் பணியாளர்கள் விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1) நகரமைப்பு அலுவலர் (நிலை–2) | –1 |
| 2) நகரமைப்பு ஆய்வாளர் | –2 |
| 3) உதவிப்பட வரைவாளர் | –0 |
| 4) சங்கிலியாள் | –1 |

இதர நிலங்கள் மூலம் வருமானம்

தற்காலிகமானதும், ஆட்சேபகரமானதாக இல்லாதவையும் ,ஆன நில ஆக்கிரமைப்பு மூலம் அறிக்கையாண்டில் வரவு ஏதும் இல்லை.

நில ஆக்கிரமைப்பு இனங்களின் விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1) அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் இருந்த ஆக்கிரமைப்புகள் | 3 |
| 2) அறிக்கையாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது | 238 |
| 3) மொத்தம் | 241 |
| 4) அறிக்கையாண்டில் அகற்றப்பட்டது | 238 |
| 5) மீதமுள்ள ஆக்கிரமிப்புகள் | 3 |

உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவுபடி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் கண்டறியப்பட்டு உரிய துறைகளுக்கு விபரம் அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி பகுதியில் உரிய ஆக்கிரமைப்புதாரர்களுக்கு அறிவிப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது.

இதர நிலங்கள் மூலம் வருமானம்

தற்காலிகமானதும் , ஆட்சேபகரமானதாக இல்லாதவையும் ,ஆன நில ஆக்கிரமைப்பு மூலம் அறிக்கையாண்டில் வரவு ஏதும் இல்லை.

நில ஆக்கிரமைப்பு இனங்களின் விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 6) அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் இருந்த ஆக்கிரமைப்புகள் | 48 |
| 7) அறிக்கையாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது | 157 |
| 8) மொத்தம் | 5 |
| 9) அறிக்கையாண்டில் அகற்றப்பட்டது | 2 |
| 10) மீதமுள்ள ஆக்கிரமிப்புகள் | 3 |

உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவுபடி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் கண்டறியப்பட்டு உரிய துறைகளுக்கு விபரம் அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி

பகுதியில் உரிய ஆக்கிரமைப்புதாரர்களுக்கு அறிவிப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது.

<u>இதர வருவாய் தரும் இனங்கள்</u>

சென்றாண்டிலும் ,அறிக்கையாண்டிலும் கீழ்கண்ட விபரப்படி வரிகளும் இதரக் கட்டணங்களும் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

**RATE OF TAXATION**

Tax Rate furnish

hed should be for the Year

| | On Building and Annual rental value | On Vacant site at Capital value |
|---|---|---|
| General | 4% | 1/1% |
| Scavenging | 1% | 1/8% |
| Lighting | 5% | 1/8% |
| Draining | 1 ½ % | |
| Water Supply | 5% | ¼% |
| Education | 2 ½% | 1/16% |
| Total | 19% | 13/16% |

19 ஆம் வருடத்தின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 98–வது பிரிவின் படி ,வாகனங்கள் பேரிலும் பிராணிகள் பேரிலும் அரை வருடம் வரி கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் மேற்படி வரவினம் எதிர் பார்க்கப்படவில்லை.

| வ.எண் | வாகனம், பிராணிகள் விபரம் | அரை வருட வரி |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகளின் இழுக்கக்கூடிய நான்கு சக்கர வில்வண்டி அல்லது வில்லைப்போன்ற இதர சாதனத்தை உடைய வண்டி ஒன்று | 5.00 |

| | | |
|---|---|---|
| 2 | ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகளின் இழுக்கக்கூடிய நான்கு சக்கர வில்வண்டி அல்லது வில்லைப்போன்ற இதர சாதனத்தை உடைய வண்டி ஒன்று | 3.00 |
| 3. | மேற்கண்ட இனங்களில் அடங்காத இதர வில்வண்டிகள் அல்லது வில்லைப்போன்ற வில்லைப்போன்ற இதர சாதனத்தை உடைய வண்டி ஒன்று க்கு | 3.00 |
| 4 | யானை ஒன்றுக்கு | 10.00 |
| 5. | ஒட்டகம் ஒன்றுக்கு | 3.00 |
| 6. | 12 அடி உயரத்திற்கு குறைவாக குதிரை அல்லது கோவேரி கழுதை ஒன்றுக்கு | 4.00 |
| 7. | 12 அடி உயரத்திற்கு குறைவாக குதிரை அல்லது கோவேரி கழுதை ஒன்றுக்கு | 2.00 |
| 8 | எருது அல்லது காளை ஒன்றுக்கு | 0.50 |
| 9 | எருமைக்கடா ஒன்றுக்கு | 0.50 |
| 10 | நாய் ஒன்றுக்கு | 0.50 |
| 11 | பன்றி ஒன்றுக்கு | 0.50 |
| 12 | கழுதை ஒன்றுக்கு | 0.50 |
| 13 | வெள்ளாடு ஒன்றுக்கு | 0.25 |

<u>2) புதிய தொழில்வரி திருத்திய அலகுகள்</u>

தமிழ்நாடு அரசுச்சட்டம் 59 உட்பிரிவு 2 ன் படி இந்நகர் மன்றத் தீர்மான எண்.560 நாள் 23.05.18 முதல் 25 சதவீதம் உயர்வு செய்து தொழில்வரி விகிதம் கீழ்கண்டவாறு

| வ.எண் | அறுமாத மொத்த ஊதியம் | தொழில்வரித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 21,000 வரை | இல்லை |

| | | |
|---|---|---|
| 2. | 21,000 முதல் 30,000 வரை | 159/- |
| 3. | 30,001 முதல் 45,000 வரை | 403/- |
| 4. | 45,000 முதல் 60,000 வரை | 793/- |
| 5. | 60,000 முதல் 75,000 வரை | 1191/- |
| 6. | 75,001 முதல் அதற்குமேல் | 1250/- |

அறிக்கையாண்டிற்கென மொத்தப் கேட்புத் தொகை , வசூல் மற்றும்நிலுவைத் தொகை பட்டியல் விவரம் (ரூ.இலட்சத்தில்)

| வரியினங்கள் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| சொத்துவரி | 1227.24 | 1049.35 | 177.89 |
| காலியிடவரி | 53.28 | 30.24 | 23.04 |
| தொழில்வரி | 123.98 | 93.63 | 30.36 |
| குடிநீர் கட்டணம் | 1108.06 | 291.95 | 816.12 |
| பாதாளச்சாக்கடை கட்டணம் | 300.21 | 43.61 | 256.60 |
| வரியில்லா இனங்கள் | 501.73 | 289.58 | 212.15 |
| மொத்தம் | 3394.81 | 1868.67 | 1526.14 |

சென்றாண்டிலும் . அறிக்கையாண்டிலும் வரியினங்கள். வரி அல்லாத இனங்கள் 100 சதவீதம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

42) நிதி நிலை 24–25

| விவரம் | வரவு | செலவு | அதிகம்/பற்றாக்குறை |
|---|---|---|---|
| பொதுநிதி கணக்கு | 4213811.00 | 470893106.00 | 49689295.00 |

| | | | |
|---|---|---|---|
| குடிநீர் கணக்கு | 882954.00 | 188856473.00 | 100561053.00 |
| கல்விக் கணக்கு | 13776628.00 | 557142.00 | 13219486.00 |

## அம்மா உணவகம்

அரசாணை (நிலை) எண்.79, மற்றும் 118 , நாள்.31.05.13, 26.09.14ன்படி , மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண். 11521/14/ மா ந அ3நாள் 12.06.14 மற்றும் 17.07.14ன் ஆணையின்படி தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜ் பேருந்து முனையத்தில் செயல் பட்டுவரும் அம்மா உணவகத்தில் தினசரி காலை டிபன் இட்லி.10 பேருக்கும் மதியம் சாப்பாடு தயிர்சாதம் 600 மற்றும் சாம்பார்சாதம் 600 தினசரி மதிய உணவாக வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவினத்தொகை பொதுநிதியிலிருந்து செலவிடப்படுகிறது. தினசரி விநியோகம் செய்யும் உணவுவகைகளுக்கு தினசரி தொகைரூ.3600/– வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| இணைப்பு : அம்மா உணவக வரவு செலவு விபரம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | | | செலவினங்கள் | | | | | | | | |
| | | வரவுகள் | ஊதியம் | எரிவாயு | காய்கறிகள் | அரிசி | தயிர் | பலசரக்கு | சாப்பாட்டுடோக்கன் | வண்டி வாடகை | மொத்தம் |
| எப்ரல் | | 7410 | 93000 | 59605 | 49825 | 4000 | 15500 | 238335 | 0 | 0 | 460285 |
| மே | | 0 | 93000 | 499 | 63510 | 2230 | 15000 | 307570 | 0 | 40 | 534729 |
| ஜீன் | | 101600 | 90000 | 41134 | 29505 | 46 | 15500 | 150619 | 0 | 0 | 328804 |
| ஜீலை | | 99825 | 93000 | 43680 | 29122 | 46 | 15500 | 141229 | 69440 | 40 | 3987 |
| ஆகஸ்ட் | | 96634 | 93000 | 39872 | 30300 | 1980 | 15000 | 135925 | 0 | 0 | 316077 |
| செப்டம்பர் | | 108000 | 90000 | 41019 | 29445 | 46 | 15500 | 133519 | 0 | 3000 | 314529 |
| அக்டோபர் | | 111600 | 93000 | 41893 | 29918 | 1980 | 15000 | 143078 | 0 | 0 | 324867 |
| நவம்பர் | | 108000 | 90000 | 44467 | 28505 | 46 | 15500 | 139408 | 0 | 3000 | 322926 |
| டிசம்பர் | | 111600 | 93000 | 46989 | 30000 | 46 | 15500 | 139478 | 0 | 4222 | 331235 |
| ஜனவரி | | 111600 | 93000 | 48180 | 29753 | 1848 | 14000 | 127500 | 0 | 0 | 314281 |
| பிப்ரவரி | | 104400 | 84000 | 47529 | 27750 | 46 | 15500 | 143230 | 72600 | 30 | 396855 |
| மார்ச் | | 108000 | 93000 | 60445 | 29850 | 1980 | 15000 | 142941 | 0 | 0 | 3436 |
| **மொத்தம்** | | **1068669** | **1098000** | **564032** | **407483** | **26294** | **182500** | **1311080** | **1440** | **822** | **4385001** |

தணிக்கைத் தடைகள்

அறிக்கையாண்டில் முடிவில் உள்ள தணிக்கைத் தடைகள் விவரம்

| | | சென்றாண்டு வரை நிலுவை | அறிக்கையாண்டில் பெறப்பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை | நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 1 | கல்விநிதி | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2 | குடிநீர் வடிகால் நிதி | 8 | 0 | 8 | 8 | 0 |
| 3 | பல்வகை நிதி | 3 | 0 | 3 | 3 | 0 |
| 4 | பொதுநிதி | 2 | 0 | 2 | 2 | 0 |
| 5 | வருவாய் மற்றும் மூலதனநிதி | 88 | 0 | 88 | 88 | 0 |
| 6 | சேமநலநிதி | 1 | 0 | 1 | 1 | 0 |
| | மொத்தம் | 102 | 0 | 102 | 102 | 0 |

47) ஆஸ்தியும் பொறுப்பும்

இந்நகராட்சியின் ஆஸ்திப் பொறுப்பு விவரங்கள் ஆண்டுக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் இறுதியில் ரூ.37,71,56,705/ சொத்துக்களின் இருப்பு உள்ளது.

நகராட்சியின் நிதி நிலைமை திருப்திகரமாக கருதக் கூடியதாக இல்லை. அறிக்கையாண்டில் நிதி நிலைமைக்கு ஏற்ப அபிவிருத்திப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

தேனிஅல்லிநகரம் நகராட்சி தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் 1415 முதல் செயல்பட்டு வருகிறது.

நகர்ப்புற வீடற்றவர்களுக்கான திட்டம்

இத்திட்டத்தில் நகராட்சி பகுதியில் கண்டறியப்பட்ட நான்கு பயனாளிகள் அருகில் உள்ள மனிதநேய காப்பகத்தில் இணைணத்து நல்லமுறையில் பராமரித்து வரப்படுகிறது.

## சாலையோர வியாபாரிகளுக்கான நலத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 715 பயனாளிகள் கண்டறியப்பட்டு அவர்களின் வாழ்க்கை தரம் முன்னேறும் வகையில் அவர்களுக்கு சேமிப்புக் கணக்கு தேசிய வங்கியில் துவங்கி தொழில் செய்வதற்கு எதுவாக ரூ.10000/ கடனுதவி பெற்று தரப்படுகிறது.

முடிவுரை

தேனி மாவட்டத்தின் தலைநகரம் தேனி அல்லிநகரம் ஆகும். நமது நகர் பகுதி விரைவில் நல்லதொரு வளர்ச்சி ஏற்பட்டு நகர் பொலிவுடன் விளங்க இந்நகராட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய நகர் மன்றத் தலைவர், நகர் மன்ற துணை தலைவர், மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனங்கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நகராட்சிக்கு பல வழிகளிலும், நன்கு ஆக்கப்பூர்வமான திட்டங்களை வழங்கிய தமிழக அரசினர் அவர்களுக்கும், நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கும் , தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கும் மென்மேலும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இந்நகராட்சிப் பணிகள் தொடர்ந்து நல்ல முறையில் செய்திட அனைத்து அலுவலர்கள் , அலுவலக பணியாளர்கள் , மற்றும் தொழிலாளர்களும் தங்களுடைய முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறேன்.

நிர்வாகம், மேலும் சிறப்பாக நடைபெற உதவி செய்த அனைத்து அலுவலர்கள் , பணியாளர்கள் , மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

30/9/24

நகராட்சி அலுவலகம்,
தேனி அல்லிநகரம்

ஆணையாளர்,
தேனி அல்லிநகரம் நகராட்சி

30-9-24